# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. 167/2019**

**Deposition of Witness for Defecto complainant : PW8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **ஜாஸ்மீன் மும்தாஜ்** | Caste | : | |
| Father/Husband Name | : | **நல்லா முகமது** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( accused absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 18.02.2026**

**முதல் விசாரணை** :

நான் விருதுநகர் மாவட்டம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 04.06.2019ம் தேதி மதுரை மாவட்டம் எழுமலை வட்ட காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்த போது எம். கல்லுப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி. பாக்கியமேரி அவர்களால் பதிவு செய்யப்பட்ட எம். கல்லுப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 66/2019ல் பிரிவு 392 இதச வழக்கில் முதல் தகவல் அறிக்கையினை பெற்றுக்கொண்டு அன்றைய தினம் 18.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் செல்லப்பன் மற்றும் ராமராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் **அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்பு மற்ற சாட்சிகளான வழக்கின் புகார்தாரர்

தங்கமணி, மகாலிங்கம், மூக்கையா, மகாராஜன், மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திருமதி. பாக்கியமேரி ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்பு நான் பணியிடை மாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

புகார் எழுத்துமூலமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரை எழுதியவர் கையெழுத்தும் அதில் உள்ள புகார்தாரரின் கையெழுத்தும் வேறு வேறு என்றால் சரிதான். புகார்தாரர் காயம் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் மலை அடிவாரத்தில் காட்டுபகுதி என்றால் சரிதான். சந்தேகத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட புகாரை அப்படியே வழக்காக பதிவு செய்து நான் நிலையத்திலேயே வைத்து பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. மாலை 6.00 மணிக்கு தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன்.